1980 ஜூலை 17] (பேரவைத் தலைவர்)

வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் இது பற்றி முழுவதும் விசாரிக்கப்பெற்று, தவறு யாருடையதாக இருந்தாலும் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்பு

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கூத்தகுடி சண்முகம் அவர்களை கோர்ட்டுக்கு கட்சித் துண்டு போட்டுக் கொண்டு வரக்கூடாது என்று நீதிபதி சொன்னது சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்திற்குள் போகாதீர்கள். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. நான் அதை இன்னும் படித்தே பார்க்கவில்லை. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் பற்றி பேரவையில் கேட்கக் கூடாது. எனது அறையில் வந்து கேட்க வேண்டும்,

(முற்பகல் 10-30)

(ஆ) மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கைக் குறிப்புகள் அனுப்பி வைக்கப் பெறுவது:

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே மானியக் கோரிக்கை மீது விவாதம் தினமும் நடந்துக் கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது கூட, மானியக் கோரிக்கையின் மீதான அமைச்சரின் கொள்கை விளக்கக் குறிப்புகளை எல்லாம் இரவு 11 மணிக்கு மேல் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அதற்கு மேல் அந்தக் குறிப்புகளை 12 மணி வரையில் படிப்பது மிக கஷ்டமாக இருக்கிறது. என்று குறிப்பிட்டிருக்கிறார். நமது மாண்புமிகு உறுப்பினர் இராஜமாணிக்கம் அவர்கள் கூட அந்தக் குறிப்பு காலம் கடந்து வந்தது என்ற கோபத்தில் கிழித்து எறிந்தார். இன்றைய மானியக் கோரிக்கையின் மீதான விளக்கக் குறிப்புகள் எல்லாம் நேற்று இரவு இரண்டு மணிக்குத்தான் எனக்கு வந்தன.. தொடர்ந்து இங்கே அந்தப் பிரச்சனையை எடுத்துவைத்த பிறகும், தலைவர் அவர்கள் அதற்கான உத்தரவுகளை இட்ட பின்னாலும் இப்படியே தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயர் எழுப்பப் பெற்றிருப்பதால், நான் சொல்ல வேண்டி வருகிறது. முதலிலே மன்றத்தில் இந்தப் பிரச்னையை நான்தான்